2002 மே 2]

பற்றிய புதிய முன்மொழிவுகளை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 267, திரு. ஜி.கே. மணி, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

267—

அரசு அச்சகம்

***2662—திரு. ஜி.கே. மணி:**
திரு. ஐ. கணேசன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மைய அச்சகத்தில் போதிய பணியாளர்களை உடனடியாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு மைய அச்சகத்தில் போதுமான பணியாளர்கள் உள்ளனர்.

(ஆ) இவ்வினா தற்போது எழவில்லை.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய அரசாங்கத்தினுடைய மத்திய அச்சகத்திலே போதிய பணியாளர்கள் இல்லை. அது மாத்திரம் அல்ல. அங்கே இருக்கக்கூடிய அச்சு இயந்திரங்கள் எல்லாம் பழைய இயந்திரங்கள். அவை பழுதுபட்டும், சரிவர பழுதுபார்க்கப்படாத நிலையிலேயும் இருந்துகொண்டு இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய கணினிகூட பழைய கணினி. இப்போது நவீன முறையான கணினிகள் எல்லாம் வந்துவிட்ட காரணத்தினாலே, அவற்றை எல்லாம் பழுதுபார்க்க முடியாமல், நவீனமயமாக்க முடியாமல், பணியாளர்கள் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினாலே பணிகள் எல்லாம் தொய்வாக இருக்கின்றன.

[2002 மே 2

உதாரணத்திற்கு நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொள்கை விளக்கக் குறிப்பு, மற்ற ஆவணங்கள் எல்லாம் வழங்கக்கூடிய நேரத்திலே காலதாமதமாக வருகின்றன. நாங்கள்கூட பலமுறை இங்கே மாமன்றத்திலே வேண்டுகோள் வைத்தோம். அடுத்த நாள் மானியக் கோரிக்கைக்கு, முதல் நாள் இரவு 10.00 மணிக்கு, 11.00 மணிக்கு வருகிறது. படிப்பதற்குக்கூட வாய்ப்பு இல்லாத நிலை. ஆகவே இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் போக்குவதற்கு மைய அச்சகத்திலே பணியாளர்களைக் கூடுதலாக்க வேண்டுவதோடு, அங்கே நவீனமயமாக்கப்பட்ட அச்சு இயந்திரங்கள், கணினிகள் எல்லாம் புகுத்தப்படுமா, உடனடியாக நிறுவப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-4-2002 முதல் இன்று வரை 168 காலி பணியிடங்கள், பல்வேறு பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. கருணை அடிப்படையில் 20 பதவிகளும், வேலைவாய்ப்பகத்தின் மூலமாக 6 பதவிகளும், தேர்வாணையத்தின் மூலமாக 5 பதவிகளும், பதவி உயர்வு மூலமாக 137 பதவிகளும் ஆக மொத்தம் 168 பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன. எனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கூறியதுபோல் அல்லாமல் அரசு அச்சகத்திலே போதுமான பணியாளர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1993-ல் ஆட்சி செய்தபோது இதற்கு என்று, இந்த மைய அச்சகத்தை எல்லாம் modernisation—நவீன முறைப்படுத்த வேண்டுமென்று சொல்லி G.O.Ms.No.312, நாள் 8-12-1993 அன்று அந்த G.O.வைப் போட்டார்கள். உடனடியாக அங்கே இருந்த தொழிலாளிகள் Writ Petition No.1997/84 என்ற Writ Petition-ஐ உயர்நீதி மன்றத்திலே தாக்கல் செய்து எங்களைப் பணி மாற்றம் செய்யக்கூடாது, அதுமட்டுமல்லாமல் retrench செய்யக்கூடாது என்று பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். 1993-லே இதை நவீனப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் போட்ட அந்த G.O.வை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். மீண்டும் அந்தத் தொழிலாளர்களிடம் பேசி அந்த G.O.வை withdraw பண்ணச் செய்து, நீதிமன்றத்திலிருந்து வழக்குகள் இப்போது வாபஸ் செய்யப்பட்டு இருக்கின்றன. மேலும் அந்தத் தொழிலாளர்களின் நலனுக்கான நடவடிக்கைகளும், இந்த அரசு மைய அச்சகங்களை நவீனமயமாக்குகிற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2002 மே 2]

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்த அச்சு இயந்திரங்கள் எல்லாம் 30 ஆண்டுகளுக்கு முன்னாலே வாங்கப்பட்டதாகச் சொல்லப்படுவது உண்மையா? அப்படி இருந்தால் இன்றைய நவீன யுகத்திற்குத் தகுந்தாற்போல நல்ல கணினிமயமான அச்சு இயந்திரங்களை வாங்கி, அதிலே தொழில்நுட்பம் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா? தற்போது 168 வேலைவாய்ப்புகள் பூர்த்தி செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புதிதாக வாங்கக்கூடிய, நவீனமயமாக்கப்பட்ட அச்சு இயந்திரத்திற்காவது, புதிய ஆளை சேர்க்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மைய அச்சகத்தைப் பொறுத்தவரையிலே தொழில்நுட்பப் பணியாளர்கள் 1695 பேர்களும், சென்னையில் உள்ள கிளை அச்சகத்திலே 183 பேர்களும், மதுரையிலே 184 பேர்களும், சேலத்திலே 96 பேர்களும், திருச்சியிலே 114 பேர்களும், புதுக்கோட்டையிலே 130 பேர்களும், விருத்தாசலத்திலே 98 பேர்களும், ஆக மொத்தம் 2500 தொழில்நுட்பப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அதுமட்டுமல்லாமல், இங்கே கூறியதுபோல் 1831 ஆம் ஆண்டு இந்த அச்சகம் தொடங்கப்பட்டது. 1831 ஆம் ஆண்டு தொடங்கிய அச்சகத்தை நவீனப்படுத்த வேண்டும் என்ற முறையில்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த பட்ஜெட் தொடரிலும், இந்த பட்ஜெட் தொடரிலும், புதுக்கோட்டை, விருத்தாசலம் போன்ற இடங்களில் உள்ள அச்சகங்களை நவீனமயமாக்க வேண்டுமென்று சொல்லி இந்த ஆண்டு 1 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த அச்சகங்கள் எல்லாம் நவீனப்படுத்தப்பட்டு, சிறந்த முறையிலே பணியாற்றும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இங்கே பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது; புதியதாக நியமனங்கள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்று பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில்

[2002 மே 2

இருக்கக்கூடிய அச்சகங்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அந்தப் பதவி உயர்வுகளிலும், நியமனங்களிலும் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படவில்லை என்ற ஒரு குறை நீண்ட நாட்களாக அங்கே சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே அங்கே இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்பட்டிருக்கிறதா? பின்பற்றப்படவில்லை என்று சொன்னால், அது உடனடியாக நிவர்த்தி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் அரசு அச்சகங்கள். ஆகவே அரசு அச்சகங்களிலே இட ஒதுக்கீட்டு முறை கண்டிப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி ஏதாவது குறைபாட்டை நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 268, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

268—

முதியோர் இல்லம்

***7089—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு நகரில் முதியோர் இல்லம் கட்டும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 40 வருட காலமாகத் தீர்க்கப்படாத பிரச்சினைக்கு, எனது தொகுதியில் உள்ள பெரிய கும்பேஸ்வரம், சாத்தம்பாக்கம் பாலாற்றின் குறுக்கே புதிய பாலம் அமைத்துத் தந்த புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், அவர்களின் வழிவந்த பொன்மனச் செம்மலின்